REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: மாசி 15உ செவ்வாய் (26—2—57) ★ ★ வெளியூர்: மாசி 16உ புதன் (27—2—57) [இதழ் 223

எம். எல். ஏ. பதவிக்கு ஏற்பட்டுள்ள கெட்ட பெயர் கழகத்தவரால் துடைக்கப்படும்

"நம்முடைய தோழர்கள் இன்றைய தினம் எம். எல். ஏ. என்ற பட்டத்தைப்பெற்றுத்தான் நாட்டுமக்களுக்கு அறிமுகமாக வேண்டியவர்களா? இல்லை இல்லை. இவர்களுடைய திறம் என்ன—இவர்களுடைய உள்ளம் என்ன—இவர்களுடைய நோக்கம் என்ன என்பதை நாட்டு மக்கள் ஏற்கனவே அறிவார்கள்.

"எம். எல். ஏ. என்ற பட்டத்தால் நமது தோழர்களுக்குக் கிடைக்கப்போகிற புதிய மரியாதை ஒன்றும் கிடையாது. வேண்டுமானால் அந்தப் பதவிக்கு இதுவரையிலே இருக்கிற

(4-ம் பக்கம் பார்க்க)

டெல்லிக்குக் காவடி தூக்கும் காமராசரின் கரத்திற்கு வலுவூட்டாதீர்!

குளிர் காய்ச்சல் கண்டுள்ள காங்கிரஸ் 'பெரியார்' என்ற கம்பளியைப் போர்த்திக் கொண்டது

கரும்பு தின்னும்போது பல்லில் சக்கை குத்தினல் கவலைப்படலாமா?

சென்னை கூட்டத்தில் அண்ணு பேருரை

"காமராசரின் கரத்திற்கு வலிவூட்டத்தான் அவரை ஆதரிக்கிறேன் என்கிறுர் பெரியார்.

"நான் கூறவிரும்புகிறேன்—கேட்டுக் கொள்கிறேன்—'அந்தக் கரத்திற்கு வலிவூட்டாதீர்கள்'—என்று!

"அந்தக் கரம், காங்கிரசுக்கான கரம்! 'கழகத்தவரின் கட்டை விரல்களை வெட்டி விடுவேன்' என்று கூறியவரின் கரம்!

"இப்போதே, 'ஆயிரம் அண்ணுதுரைகளாலும், பத்துப் பெரியார்களாலும் காங்கிரசை அழிக்கமுடியாது' என்று கூறுகின்றவரின் கரம்!

"அந்தக் கரம் வலுப்பெற்றுல்—தமிழரின் குரல்வளையை நெறிக்கும். அந்தக் கரம் வலுப்பெற்றுல், கழகத்தவரையே தலையில் குட்டும்! அந்தக் கரம் மேலும் வடநாட்டிற்குக் காவடிதூக்கும் கரம்! எனவே, அந்தக் கரத்திற்கு வலிவூட்டாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்"

என்று அண்ணு அவர்கள், சென்னை—சிந்தாதிரிப்பேட்டையில் 23—2—57-ந் தேதியன்று நடைபெற்ற தேர்தல் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்கள்.

தொடர்ந்து பேசுகையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலில் ஈடுபட்டிருக்கிற நம்மை எதிர்ப்பதற்குக் காங்கிரசார், பெரியாரைத் துணைக்கு அழைத்திருக்கிருர்கள். பெரியார் நம்மை எதிர்ப்பது கண்டு தோழர்களில் சிலர் வருந்தக்கூடும். ஆனல், கரும்பு தின்னும்போது சக்கை ஒன்று பல்லிடுக்கில் குத்தி இரத்தம் வந்தாலும், கரும்பின் சுவை இனிப்பாகத்தான் இருக்கும். வழிகிற இரத்தத்தைத் துப்பிவிட்டு, நாம் கரும்பைத்தான் மேலும் சுவைக்க முற்படுவோம். இதுபோலத்தான் பெரியார் நம்மை எதிர்த்தாலும் நாம், தேர்தல் வேலைகளை தொடர்ந்து செய்கிறோம்.

"கரும்பு தின்னும்போது சக்கை குத்துவதை நாம் பெரிய தடையாகக் கருதாதது போலத்தான், பெரியார் நம்மை எதிர்ப்பது கண்டு, நாம் கவலைப்படத் தேவை இல்லை.

"இதில் எனக்கு ஒரு பூரிப்பு—மகிழ்ச்சி என்னவென்றுல், நம்மை எதிர்ப்பதற்குக் காங்கிரசார் பெரியாரை நாடினுர்களே, அதுதான்!

"எந்தப் பெரியார், காங்கிரசை ஒழிப்பதற்காகவே கடந்த 30-ஆண்டுக் காலமாகப் பாடுபட்டு வருவதாகக் கூறுகிறுரோ, அந்தப் பெரியாரையே நாடியுள்ளார்கள் காங்கிரசார்! தங்களிடமுள்ள பணபலம், பத்திரிகை பலம் போன்றவை எல்லாம் நம்மை எதிர்ப்பதற்குப் போதுமானதல்ல என்று கருதி, 'தமிழகத்திலேயே அண்ணுதுரையை ஒழித்துவிடுவேன்' என்று கூறுகிற அண்ணுதுரையின் ஒரே 'எதிரி'யை-பெரியாரை துணைக்கு அழைத்தார்களே காங்கிரசார், அது மகிழ்ச்சிக்குரியதல்லவா?

"இன்று காங்கிரசார்கூட நம்மை எதிர்த்துப் பேசுவதில்லை, தேர்தல் கூட்டங்களில்! அவர்கள் கூட ஓய்வெடுத்துக் கொண்டிருக்கிருர்கள்; ஆனல், பெரியார் தான் பேசிவருகிருர்.

"காங்கிரசார் தங்களிடத்தில் உள்ள அம்புருத்தூணி காலியாகிவிட்ட நிலையில் தி. மு. கழகத்தவரை எதிர்க்க பெரியாரை அழைத்து வந்திருக்கிருர்கள்; பெரியாரும், தன்னிடமுள்ள அம்புருத்தூணியிலிருந்து அம்புகளை எய்தவண்ணமிருக்கிருர்.

"காங்கிரசார் இன்று மக்களிடத்தில் எதைக் காட்டி ஓட்டுக் கேட்கின்றனர்? ரூபாயைத் தட்டிக் காட்டித்தானே! ஆனல், காங்கிரசார் ரூபாயை—வெள்ளிப் பணத்தைத் தட்டினல், மக்களுக்கு அது பிடிக்கவில்லை; மக்களுக்கு ரூபாய் பிடிக்கிறது — ஆனல், தட்டுகிற கை அவர்களுக்குப் பிடிக்கவில்லை; எனவே, பெரியாரை அழைத்துவந்து தட்டச் சொல்லுகிருர்கள்!

"பெரியார் அவர்களும் இந்தத் தளர்ந்த பருவத்திலே, நாள் விடாமல் காங்கிரசுக்காகப் பேசி வருகிருர். காங்கிரசார் நம்மை எதிர்ப்பதற்குப் பெரியாரை நாடியிருக்கிருர்கள் என்பது நமது மகிழ்ச்சிக்குரியதே தவிர, அச்சத்திற்கோ, கவலைக்கோ உரியதல்ல!

"நான் ஒன்று கூறுவேன்—என்னுடைய தலைவர் பெரியாரைப் போன்று, தமிழகத்தில் வேறு தலைவரே இருக்க முடியாது.

"சில நாட்களுக்கு முன் நான் 'தினமணி' பத்திரிகை ஒன்றில் பார்த்தேன்—பெரியார், காங்கிரசை, பன்றி—கழுதை—கட்டெறும்பு என்று ஏசியிருப்பதை! 'சென்ற தேர்தலின்போது காங்கிரஸ் கழுதையாயிருந்தது; இந்த தேர்தலின்போது பன்றியாக மாறியுள்ளது; இனி கட்டெறும்பாகிவிடும்,' என்று பெரியார் பேசியிருக்கிருர்!

"காங்கிரஸ் அபேட்சகரை ஆதரித்துப் பேசுகிற கூட்டம் ஒன்றில், காங்கிரஸ்காரர்கள் பலரை வைத்துக்கொண்டு, காங்கிரசார் செலவில் அமைத்த மேடையிலேயே அமர்ந்துகொண்டு, காங்கிரசைப் பற்றி கழுதை—பன்றி—கட்டெறும்பு என்று பேசக்கூடிய நெஞ்சுரமும் துணிவும் தமிழ் நாட்டில் வேறு எந்தத் தலைவருக்கு இருக்கிறது, என் தலைவர் பெரியாரைத் தவிர?

"நாம் தேர்தலில் வெற்றி பெற்றபின், என்றுவது நானும் பெரியாரும் சந்தித்துப் பேசுகிற வாய்ப்பு ஏற்பட்டால், அப்போது நான், 'என்ன ஐயா, இப்படி பெரிய தாக்குதல் நடத்தினீர்களே!' என்று கேட்டால், பெரியார் அதற்கு 'போடா, பைத்தியக்காரா! நான் மட்டும் காங்கிரசை கழுதை என்றும், பன்றி என்றும் பேசியிரா விட்டால், நீங்கள் வெற்றி பெற்றிருக்க முடியுமா?' என்று என்னிடம் சொல்லத்தான்செய்வார்.

"எனவே, காங்கிரசைப் பெரியார் ஆதரித்துப் பேசுகிருர் — நம்மை எதிர்க்கிருர் என்று தோழர்கள் எவரும் கவலைப்படத் தேவை இல்லை. பலவீனப்பட்ட இருவர், ஒன்றுசேர்ந்து நம்மை எதிர்க்கிருர்கள்; அவ்வளவுதான்!

"குளிரும் காய்ச்சலும் கண்டவன்தான், கம்பளியை எடுத்துப் போர்த்திக்கொள்வான்.

"குளிர் காய்ச்சல் கண்டுள்ள காங்கிரஸ், இன்று பெரியார் என்ற கம்பளியை எடுத்துப் போர்த்திக் கொண்டிருக்கிறது. அவ்வளவுதான்!"

[பேச்சு முடியவில்லை; தொடர்ந்து வெளிவரும்.]

காங்கிரஸ் ஆட்சியில் இந்த நிலைமை?

பம்பாய், பிப். 19—

'ஆலோசனையில் இருந்து வருகிறது' என்றுல், 'சம்பந்தப்பட்ட 'பைல்'கள் காணுமற் போய்விட்டது' என்று அர்த்தம்!

'தீவிர ஆலோசனையில் இருந்து வருகிறது' என்றுல், 'பைல்'களைத் தேடிக்கொண்டு இருக்கிருர்கள்' என்று பொருள்!

இவ்வாறு, சுதந்திர இந்தியாவின் முன்னுள் நிதி அமைச்சர் ஜான்மத்தாய் குறிப்பிட்டுள்ளார்.

பத்தாயிரம் மக்கள் கலந்து கொண்ட மாபெரும் ஊர்வலம்

காஞ்சிநகர் விழாக்கோலம் பூண்டது

அண்ணு அவர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம்

கடந்த 24-ந் தேதியன்று அண்ணு அவர்களை ஆதரித்து, காஞ்சி நகரில் மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது.

இந்த ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான சைக்கிள்களுடன் கழகத் தோழர்கள் உட்பட பத்தாயிரத்திற்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

ஊர்வலம் சென்ற வீதிகளில் வழியெங்கும், இருவண்ணக் கழகக் கொடிகளும் தோரணங்களும் கழக இலட்சியங்கள் அடங்கிய தட்டிகளும் கட்டப்பட்டிருந்தன. வீதிகளின் குறுக்கே, வழி நெடுக 'பானர்'களும் எழுதித் தொங்க விடப்பட்டிருந்தன. மேலும், காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் அனுபவித்த இன்னல்களை விளக்கும் படங்களும், கழகப் 'போஸ்டர்'களும் ஆங்காங்கே தொங்கவிடப்பட்டு பொதுமக்கள் அனைவருக்கும் கருத்து விருந்தளித்தன.

அன்று காஞ்சி நகரமே திரண்டு வந்து ஊர்வலத்தில் கலந்து கொண்டது என்று கூறுவதானுல் மிகையாகாது! நகரில் அன்று மக்கள் பேரார்வம் காட்டினர். பெண்களெல்லாம் கூட்டம் கூட்டமாகக் கூடிநின்று, ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்கள் பெருவெள்ளத்தையும் அவர்களிடையே காணப்பட்ட ஆர்வத்தையும் கண்டு களிப்புற்றனர்.

இந்த வெற்றிகரமான ஊர்வலத்தினுல் மிரண்டுபோன காங்கிரசார், ஒலி முகம்மதுப்பேட்டையைச் சேர்ந்த சேவாளர்களான கழகத் தோழர்கள் சிலரைத் தாக்கிக் காயப்படுத்தினர்.

இது குறித்து போலீசாரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

காங்கிரஸ் கூட்டங்களில் கல்லெறித் தாக்குதல்

குசராத்தில் தினசரி சம்பவமாகிவிட்டது

அகமதாபாத், பிப். 26—

மத்திய அமைச்சர்களோ மாநில அமைச்சர்களோ மற்றும் காங்கிரஸ் தலைவர்களோ, யாராக இருந்தாலும் கலந்துகொள்ளும் கூட்டங்களில் மகாகுசராத் ஆர்ப்பாட்டக்காரர்களின் கல்லெறி, ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகள் நித்திய நிகழ்ச்சிகளாக மாறிவிட்டிருக்கின்றன.

அகமதாபாத் நகரில் நேற்று மாலை ஒரு காங்கிரஸ் கட்சித் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் மத்திய கனரகத் தொழில் அமைச்சர் மனுபாய் ஷா பேசிக்கொண்டிருந்தபோது, மகாகுசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலர், தங்கள் கோரிக்கைகளை முழங்கிக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்ததாகவும் அதுபோது போலீசார் மீது சோடா புட்டிகளை வீசி எறிந்தனர் என்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

இந்த நிகழ்ச்சி காதியா என்ற ஒரு பகுதியில் நடைபெற்றதாகவும், அதே நாளில் அகமதாபாத் நகரின் மற்றொரு பகுதியில் மத்திய அமைச்சர் மொரார்ஜி தேசாய் ஒரு தேர்தல் கூட்டத்தை முடித்துவிட்டுத் திரும்பினபோது, கார்கள்மீது வேறு சில மகாகுசராத் ஆர்ப்பாட்டக்காரர்கள் கல் வீசியிருக்கின்றனர் என்றும் அச்செய்தி மேலும் தெரிவிக்கிறது.

பொதுத் தேர்தல் எதிரொலி:

காங்கிரஸ்—சுயேச்சை ஆதரவாளர் மோதுதல்

ஒருவர் மரணம்; 12 பேருக்குப் படுகாயம்

பங்களூர், பிப். 25—

கோலார் மாவட்டத்தைச் சேர்ந்த சிந்தாவணி எனும் நகரில் காங்கிரஸ்—சுயேச்சை அபேட்சகர்களின் ஆதரவாளர்களிடையே பெரியதோர் கைகலப்பு ஏற்பட்டுக் கல்லெறிதல் போன்ற நிகழ்ச்சிகளின் விளைவாக ஒருவர் கோர மரணம் அடைந்தார். இவர் நாராயணசாமி என்ற பெயருடைய தையற்காரர் என்றும், மற்றும் பன்னிருவருக்குப் படுகாயம் ஏற்பட்டதாகவும், அவர்களில் 9 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிகிறது.

நிலைமையைச் சீர்செய்ய கோலார் மாவட்ட போலீஸ் அதிகாரி விரைந்துள்ளார் என்றும், இப்போது நிலைமை அமைதியாக இருக்கிறதென்றும் தெரிகிறது.

கடந்த 22-ந் தேதியன்று காடக் எனுமிடத்தில் 'ஜனசங்' கட்சியைச் சேர்ந்த அபேட்சகர்களை ஆதரித்துப் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றபோது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர் என்றும், அதில் சிலர் காயம் பட்டனர் என்றும் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 26—2—57 செவ்வாய்

கங்காணிகள் ஜாக்கிரதை!

★

கனம்கள் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, ஓ. வி. அளகேசன், மரகதம் சந்திரசேகரன் ஆகியோர் வடநாட்டு ஏகாதிபத்திய வாதிகளுக்கு தமிழ்நாட்டில் கிடைத்துள்ள முதல்தரமான கங்காணிகளில் சிலராவர்.

இந்தக் கங்காணிகளுக்கும் சில பதவித் துண்டுகளை, வடநாட்டுத் 'தேவர்'கள் பிச்சையிட்டிருக்கின்றனர். தங்களுக்குத் தரப்பட்டிருக்கும் அந்தப் பதவித் துண்டுகளை ருசித்துக் கொண்டிருக்கும் இந்தக் கங்காணிகள், வடநாட்டு ஏகாதிபத்தியவாதிகள் தமிழ் மக்களுக்கு இழைக்கும் இமாலயப் பெரிய அநீதிகளையும் கொடுமைகளையும் சகித்துக் கொண்டிருப்பது மட்டுமின்றி தமிழ் மக்களும் அவற்றைச் சகித்துக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள் போலும்.

இந்தக் கங்காணிகளையும் இன்னும் தமிழகத்தில் தங்களுக்குள்ள இதர ஏஜெண்டுகளையும் பிணியாளிகள் ஆக்கிக் கொண்டுதான், மூர்க்கத்தனமான வெறிகொண்ட அக்கிரமங்களை வடநாட்டவர் தமிழர்களுக்கு இழைத்து வருகின்றனர் என்பதை, தேர்தல் நேரத்தில் இந்தக் கங்காணிகள், தங்களின் வடநாட்டு எசமானர்களது அநீதிகளுக்கு நியாயம் கற்பிக்க முற்பட்டிருக்கும் போக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்தித் திணிப்பு என்பது, வடநாட்டு பாசிச வெறியர்கள் தங்களுடைய ஏகாதிபத்திய 'ஏக இந்திய' அரசியல் அமைப்பிற்கு உறுதி பூசுவதற்காக மேற்கொண்டிருக்கும் தீவிரமான நடவடிக்கையாகும். இந்த இந்தித் திணிப்பிற்கு இவர்கள் கடந்த பத்து ஆண்டுக்காலமாக, 'அடியார்க்கும் அடியேன்' என்ற உளப்பாங்கோடு சம்மதம் தந்திருந்தவர்கள். ஆனால் தேர்தல் நெருங்கும்போது, இங்கு இந்தித் திணிப்பு அனுமதிக்கப்படமாட்டாது என்ற முடிவு கொண்டுள்ள தமிழ் மக்களைச் சந்திக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருப்பதால், என்றுமே இல்லாத வகையில் 'இந்தி' பற்றிப் பேசுகின்றனர். தமிழ் மக்களை முழந்தாள் வணக்கம் செய்து, 'பாவசங்கீர்த்தனம்' பாடுகின்றனர்.

'இந்தி இன்னும் தேசிய மொழியாகும் தகுதி பெறவில்லை. அதனைத் தேசிய மொழியாக்க ஒரு காலவரையறை நிர்ணயிப்பதை நான் ஏற்பதற்கில்லை' என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி சென்னைக் கூட்டம் ஒன்றில் பேசினாராம்.

இத்தனை நாள் டில்லிப் பட்டணத்தில் மந்திரி பதவியைச் சுவைத்துக்கொண்டிருந்த இந்த மனிதருக்கு தேர்தல் நெருங்கும்போது தமிழ் மக்களிடம் ஓட்டுப் பெறவேண்டியிருக்கும் போதுதான், இந்தியின் தகுதியற்ற தன்மை தெரிகிறது போலும். இத்தனை நாள் இந்த தகுதியற்ற இந்தி தமிழ் நாட்டின் தலையில் கட்டாயமாக கொஞ்சம் கொஞ்சமாக சுமத்தப்படுவதைக் கண்டும் காணாதவராக இருந்த டி. டி. கே.-யின் இரட்டை வேடத்தை தமிழ் மக்கள் அடையாளம் கண்டுகொள்ள நெடுநேரமாகாது என்று அவருக்கு எச்சரிக்க விரும்புகிறோம்.

இவரைப் போன்று, தமிழர் தம் நலன்களை, நாட்டை, மொழியை மறந்துவிட்ட தமிழ் நாட்டில் வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பேயுருவம் விரிந்து படரப் பாதுகாப்புத் தரும் கங்காணிகளையும், 'இவர்கள் எல்லாம் பிற்போக்கான கங்காணிகள், நாங்கள் முற்போக்கான கங்காணிகள்' என்று கூறும் இதர 'அகில இந்தியா'க்களையும் தமிழ் மக்கள் நன்கு புரிந்துகொள்ள வேண்டும். இவர்களது கோஷங்கள் எத்தனைதான் கவர்ச்சிகரமானவையாயிருந்தாலும் தேசபக்தி வேஷங்கள், எத்தனைதான் மயக்கந்தருவனவாயிருந்தாலும் தமிழ்ப்பெருங்குடி மக்கள், தங்கள்மீது ஆதிக்கம் செலுத்தும் வடநாட்டுப் பாசிச ஏகாதிபத்திய வெறியர்களுக்கு உற்ற நண்பர்களாக பங்காளிகளாக, ஏஜெண்டுகளாக விளங்கும் எல்லா 'அகில இந்தியா'க்களுக்கும் தேர்தலில் தக்க பாடம் கற்பிக்கத் தவறக்கூடாது.

'பல்கலைக் கழகங்கள் சுதந்திரமாக இயங்கவேண்டும்'

'கவர்னர்கள் வேந்தர்களாக இருப்பது கூடாது'

பம்பாய், பிப். 24—

"பல்கலைக் கழகங்களின் மதிப்பும் கௌரவமும் காப்பாற்றப்பட வேண்டுமானாலும், கல்விச் சுதந்திரம் நிலவ வேண்டுமானாலும் கவர்னர்கள் பல்கலைக் கழகங்களின் வேந்தர்களாக இருப்பது கூடாது. இந்த கேடு பயக்கும் முறையை நாடெங்கிலும் ஒழித்தாக வேண்டும்," என்று, பம்பாய் பல்கலைக் கழக துணைவேந்தர் ஜான் மத்தாய் கூறியுள்ளார்.

பிணிகளுடன் போராடும் 'சுண்டெலி வீரர்'கள்!

சுண்டெலிகள் வைத்திய ஆராய்ச்சிக்குப் பயன்படுகின்றன. அமெரிக்காவிலுள்ள சோதனைக் கூடம் ஒன்று ஆராய்ச்சிக்காக பல்லாயிரம் சுண்டெலிகளை வளர்த்து, அவற்றை உலகமெங்குமுள்ள ஆராய்ச்சி நிலையங்களுக்கு அனுப்புகிறதாம்!

புற்று நோய், இருதய வியாதி, வலிப்பு, முடக்குவாதம் முதலிய நோய்களாகிய மனித குலத்துப் பகைவர்களோடு போர் செய்ய அண்மையில் ஒரு மாதத்தில் 'நோய்களோடு போராடும் 40,000 வீரர்களை உலகத்தின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறதாம்!

ஏறக்குறைய ஆண்டிற்கு 12 இலட்சம் சுண்டெலிகள்-தினசரி சுமார் 3,300-சோதனைக்கூடத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றனவாம். அந்தச் சோதனைக்கூடம் பல நோய்கள் சம்பந்தமாகச் செய்யும் ஆராய்ச்சிக்காக ஆண்டிற்கு 7 இலட்சம் சுண்டெலிகளை உபயோகிக்கிறதாம்!

தேர்தலின் மகிமையே மகிமை!

இந்தி பற்றி டி. டி. கே.

"இந்தி தேசிய மொழியாவதற்குரிய தகுதியை இன்னும் பெறவில்லை"

என்று டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினாராம்!

தகுதி இல்லாத இந்தியை, தமிழர்கள்மீது திணிக்கும் சதிக்கு இத்தனை நாளாய் வடநாட்டவருடன் பங்காளியாக இருந்த இவர், தேர்தல் நெருங்கும்போது இப்படி ஒரு சாகசப் பேச்சில் ஈடுபட்டிருப்பது, வியப்புக்குரியதல்ல! எல்லாம் தேர்தலின் மகிமை!

இந்தி இன்னும் தகுதி பெறாததால், இந்தி தேசிய மொழியாக்கப்படுவதற்கு ஒரு காலவரையறை நிர்ணயிக்கக் கூடாதெனவும் அவர் கூறினாராம்!

'இந்தி மொழி தகுதிபெற இன்னும் 20, 30-ஏன் 50 ஆண்டுகள் கூட ஆகலாம்,' என்றும் அவர் கூறினாராம்!

"நான் இந்தி தேசிய மொழியாக்கப்படுவதை எதிர்ப்பதாக எவரும் கருதக்கூடாது. அப்படி ஆக்கப்படுவதற்கு அரசியல் சட்டத்தில் ஒரு காலவரையறை நிர்ணயிக்கப்பட்டிருப்பதையே நான் எதிர்க்கிறேன்," என்றும் கூறினாராம்!

இன்றைய இந்தி

"தேசிய மொழியாக்கப்பட வேண்டியது இன்று வடநாட்டில் வழங்கப்படும் இன்றைய இந்தி அல்ல; மாறாக, வேறு ஏதாவது ஒரு இந்திதான் தேசிய மொழியாக்கப்பட முடியும்" என்றும் அவர் கூறினாராம்!

கையாலாகாதவர்களின் கடைசி ஆயுதம்!

பொறையாறு தொகுதியில் கம்யூனிஸ்டுகள் கலாட்டா

பொறையார், பிப். 22—

இங்கு தேர்தல் பிரச்சாரப் பணியில் ஈடுபட்டுவந்த கழகப் பிரச்சாரத் தோழர்களை இடைமறித்து, கழகக் கொடிகளை பலவந்தப்படுத்திக் கைப்பற்றி சில கம்யூனிஸ்டுகள் காலித்தனம் செய்ததாகத் தெரியவருகிறது.

நேற்று முன்தினம் இரவு 10 மணி அளவில் சீர்காழித் தொகுதி திருக்கடையூரில் தி. மு. கழகத் தேர்தல் பிரச்சாரம் புரிந்துவந்த தோழரை 15 கம்யூனிஸ்டுகள் தங்கள் தேர்தல் அலுவலகத்திற்குமுன் வழிமறித்து, அவரிடமிருந்த கழகக் கொடியை கைப்பற்றிக் காலித்தனம் செய்தனரென்றும், எதிர்பாரா வகையில் அவ்வழி வந்த தி. மு. கழக அபேட்சகர் தோழர் சி. ஜம்பு, மற்றும் பல தோழர்களும், ஊர்ப் பொதுமக்களும் அமைதியான முறையில் கம்யூனிஸ்டுகளை விலக்கி, கழகக் கொடியைப் பெற்றுத் தம் வழியே சென்று விட்டிருக்கின்றனர்.

இந்நிகழ்ச்சியையொட்டி ஊர்ப் பொதுமக்கள் அனைவரும் கம்யூனிஸ்டுகளின் காலித்தனத்தைக் கண்டித்துப் பேசுவதாகவும், இதுபற்றிய மனு ஒன்றை தோழர் சி. ஜம்பு அவர்கள் போலீஸ் சப் - இன்ஸ்பெக்டரிடம் தந்துள்ளார் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ந. நி.)

பழங்குடி மக்கள் வாழ்வு பெற!

'தி. மு. கழக அபேட்சகர்களையே ஆதரியுங்கள்'

தமிழகப் பழங்குடி மக்களுக்கு பம்பாய்வாழ் சகோதரர்களின் உருக்கமிக்க வேண்டுகோள்

"வருகிற பொதுத் தேர்தலில் காங்கிரசு, தி. மு. கழகம், கம்யூனிஸ்டு முதலான கட்சியைச் சார்ந்தவர்களும் எக்கட்சியையும் சாராதவர்களும் போட்டியிடுகின்றனர். சுதந்திரம் கிடைத்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் ஆகியும், நம்முடைய மக்களின் நிலையில் எத்தகைய மாறுதலும் இதுகாறும் ஏற்பட்டதில்லை. கண் துடைப்பாக அங்கு ஒன்று—இங்கு ஒன்று என்று சில செய்து விட்டதாகக் காங்கிரசார் தம்பட்டம் அடித்து வருகின்றனர். ஆனால், நம்முடைய மக்களுக்கு சாதி வெறியர்கள் செய்கின்ற குறைபாடுகளை ஆட்சியாளர்கட்கு எவ்வளவோ எடுத்துக் கூறியும் தக்க நடவடிக்கை எடுப்பதில்லை.

"கிருபளானிபோன்ற தலைவர்களையெல்லாம் எதிர்ப்பின்றி சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கும் காங்கிரசு, மறைந்த அண்ணல்—அம்பேத்காருக்குப் போட்டியாக சாதாரண ஒருவரை கசரோல்கர் என்பவரை நிறுத்திவைத்துத் தோற்கடித்தது நாடறிந்த உண்மையாகும். அம்பேத்கார் மறைவு குறித்து ஏதோ சதி நடந்திருக்கிறது என்று அம்பேத்கார் அவர்களின் குமாரர் எஸ்வந்த் ராவ், மக்கள் சபைக்குமுன் நின்று கண்ணீர் விட்டும்கூட இதுகாறும் எத்தகைய நடவடிக்கையையும் காங்கிரசார் எடுக்கவில்லை. அண்ணல் அம்பேத்கார் வாழ்ந்த நாட்களில் அவர் காங்கிரசையும் அதன் பிற்போக்குக் கொள்கைகளையும் தீவிரமாக எதிர்த்து வந்து தன்னந்தனியாகப் போராடி வந்துள்ளார்.

"காங்கிரசை ஆதரிப்பது குஷ்டரோகியை கட்டித் தழுவுவது போன்ற செய்கையாகும்-என்று டாக்டர் அம்பேத்கார் அவர்கள் முழங்கி வந்துள்ளார்கள்.

"டாக்டர் அம்பேத்கார் அவர்களின் சடலத்தை டில்லி சர்க்கார் விமானம் மூலம் பம்பாய்க்குக் கொண்டுவர முதலில் இலவசம் என்று சொல்லிய பின்னர் அதற்குரிய தொகையை வசூலித்துவிட்ட போக்கு கண்டு இந்திய அரசியல் சட்டத்தையே உருவாக்கிய ஒரு மேதைக்கு சர்க்கார் காட்டும் மரியாதை இதுவா? என்று சிந்தித்து பார்க்கவேண்டுகிறோம்.

"கம்யூனிஸ்டுக் கட்சிக்காரர்களோ சமுதாயத்தில் உள்ள சாதிப்பாகுபாடுகள் பற்றி எதுவும் பேசாமலேயே மௌனம் சாதித்து வருகின்றார்கள். அதோடு காங்கிரசுக்கு நல்ல பிள்ளையாக மாறி கடந்த காலங்களில் சட்டசபையில் நமது இழிவு போக்கும் பிரச்சினை குறித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொண்டதில்லை.

"அதுமாத்திரமல்லாமல், நம்முடைய மாபெரும் தலைவர் அம்பேத்கார் அவர்கட்கு எதிராக அவர்களின் கட்சித் தலைவர் டாங்கே என்பவரை நிறுத்தி டாக்டர் அம்பேத்கார் அவர்களைப் படுதோல்வியடையச் செய்தவர்கள் என்பதும் யாரும் மறுத்திட முடியாததோடு மட்டுமின்றி அவர்களின் தில்லுமுல்லுகள் அனைத்தையும் அடிக்கடி டாக்டர் அவர்கள் அம்பலப்படுத்திவந்திருக்கின்றார்கள்.

"இந்நிலையில் நம்முடைய உயிர்ப் பிரச்சினையான சாதி இழிவு போக்கும் முயற்சிக்கு அன்று முதல் இன்றுவரை போராடி வருபவர்கள் திராவிடத் தலைவர்கள் ஆவார்கள். வகுப்பு உரிமைக்காகத் தமிழகத்தில் பல்வேறு போராட்டங்களை நடத்தி, ஆலயப் பிரவேசம், கலப்புத் திருமணம் போன்றவைகளையே உயிர்ப் பிரச்சினையாகக்கொண்டு இதுகாறும் போராடி வந்துள்ளார்கள். 40 வயதுப் பெரியவரை 4 வயது சிறுவன், 'நீ, நான்' என்று பேசிய பிற்போக்குத்தனத்தை எதிர்த்துப் போராடி, நம்மவர்களை மனிதராக நடத்தச் சொல்லி சாதிப் பித்தர்களிடம் இடைவிடாது பிரச்சாரம் செய்துவருபவர்கள் திராவிடத் தலைவர்கள். எனவே நாம், வருங்காலத்தில் மனிதனாக வாழவும் உரிமையோடு வாழ்க்கை நடத்தவும், யார் நம்முடைய பிரதிநிதிகளாகச் சட்டசபைக்கு செல்லத் தகுந்தவர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டியது ஒவ்வொரு வாக்காளர்களினுடையவும் இன்றியமையாத கடமையாகும்.

"கடந்த தேர்தலில் ஏராளமான தாழ்த்தப்பட்டோர், சம்மேளனத் தோழர்களை எல்லாம் சட்டசபைக்குச் செல்ல அரும்பாடுபட்டவர்களும் இன்று தலைவர் என். சிவராஜ், ஏ. இரத்தினம் போன்றவர்கட்குத் தேர்தலில் ஆதரவு கொடுக்க முன்வந்திருப்பவர்களும் தி. மு. கழகத்தவர்களாகும்.

"புதிதாக சட்டசபைக்குச் செல்லும் அவர்களை 'பதவிப் பித்தர்கள்' என்று காங்கிரசாரும் அவர்களது அடிவருடிகளும் தப்புப் பிரச்சாரம் செய்துவருகின்றனர். டாக்டர் அம்பேத்கார் போன்றவர்கள் சட்ட மன்றத்தில் வீற்றிருந்த காரணத்தால் தான், நம்மவர்களுக்கு வேண்டிய நன்மைகள் செய்யமுடிந்தது. வெளியிலே இருந்து நாம் எவ்வளவுதான் கத்தினாலும் இன்றைய ஆணவ ஆட்சியாளர்கள் அவைகளைக் காதில் போட்டுக்கொள்ளப் போவதில்லை. இந்தக் கருத்தை எண்ணத்தில்கொண்டுதான், தலைவர் அம்பேத்கார் அவர்கள் சட்டமன்றத்திலேயே பெரும்பாலும் போராடிவந்துள்ளார்கள்.

"எனவே தாழ்த்தப்பட்ட சமுகத்தைச் சார்ந்த பெரியோர்களே, தாய்மார்களே! உங்களது மேலான வாக்குகளை தி. மு. கழகத்தாருக்கு 'உதய சூரியன்' பெட்டியில் போட்டு அவர்களை வெற்றி பெறச் செய்யவேண்டுமென்று பணிவன்புடன் வேண்டுகின்றோம்."

★★★★★★★★★★★★★★★★★

சர்வாதிகாரம் வீழ
ஜனநாயகம் பிழைக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★

இந்தியக் கிராமங்கள் வாழ்வு பெற!

அந்நிய நாடு உதவுகிறதா?

நடைமுறை ஆண்டில் இந்தியாவிலுள்ள கிராமங்களுக்கு ரூ. 2 கோடி மதிப்புள்ள சாதனங்களை அன்பளிப்பாகத் தருவதற்கு அமெரிக்க உதவி நிறுவனம் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

க்ஷயரோக, குஷ்டரோக நிலையங்கள் உட்பட பல நிறுவனங்கள் உதவி பெறக்கூடும்.

விவசாயிகளுக்குக் கலப்பைகள். கிராமவாசிகளுக்கு தையல் இயந்திரங்கள், அம்பர் சர்க்கா ரேடியோ போன்ற சாதனங்கள் அளிக்கப்படுமாம்.

200 இடங்கள் இவ்வுதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனவாம்.

சர்க்காரின் கண்துடைப்பு; ஊழியர்கள் ஏமாற்றம்

'இந்தச் சிறு தொகைக்கா இத்தனை நாள் போராடினேம்'

"இந்தச் சிறு தொகைக்காகவா நாங்கள் கடந்த பத்து ஆண்டுக்காலமாகப் போராடிவருகிறேம்? அறிவிக்கப்பட்டுள்ள கிராக்கிப் படி உயர்வு, நாங்கள் எதிர்பார்த்ததைவிட மிகக்குறைவு; இந்த உயர்வுக்குப் பிறகும், சென்னை சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப் படி, டில்லி சர்க்கார் ஊழியர்களின் கிராக்கிப் படியைவிட மிகக்குறைவானதாகவே இருக்கும்,"

என்று, சர்க்கார் ஊழியர் சங்கத்தவர் கருத்தறிவித்திருக்கின்றனர்.

சர்க்கார் அறிவித்துள்ள கிராக்கிப் படி உயர்வு பற்றி, இன்று சங்க மத்தியக் கமிட்டி கூடி முடிவு எடுக்கும்.

இன்றைக்குள் இடைக்கால நிவாரணம் அளிக்காவிட்டால், இன்றுமுதல் துக்கச் சின்னம் அணிந்துகொண்டு வேலை செய்ய விருந்தனர், ஊழியர்கள்!

சர்க்கார் அறிவிப்பு

கடந்த 1956 நவம்பருக்கு முன்புவரை தரப்பட்டு வந்ததைவிட ரூ. 12 அதிகம் கிராக்கிப்படி தருவது என்று சர்க்கார் முடிவு செய்திருக்கிறது. அதாவது கடந்த நவம்பரில் ரூ. 5 பஞ்சப்படி உயர்வு தருவதென முடிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இப்போது ரூ. 7 உயர்த்துவது என்று முடிவாகியிருக்கிறது.

இது இடைக்கால நிவாரணமே என்றும், நிதிக் கமிஷன் அறிக்கைக்குப் பிறகு ஊழியர்களின் ஊதிய உயர்வுக் கோரிக்கையை மீண்டும் கவனிக்கப்படும் என்றும் சர்க்கார் குறிப்புக் கூறுகிறது.

2,86,400 ஊழியர்களுக்கு இந்தப் படி உயர்வு கிடைக்கும் என்றும், இதனுல் சர்க்காருக்கு சுமார் ரூ. 4½ கோடி செலவாகும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

உணவு உற்பத்தித் திட்டநிலை இதுதான்!

இறக்குமதிப் பாதையில் இந்தியப் பேரரசு

புதுடில்லி, பிப். 25—

நடப்பு ஆண்டில் இந்தியப் பேரரசு, 5 இலட்சம் டன் அரிசியை பர்மாவிலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும் இறக்குமதி செய்யுமாம்.

சென்ற மாதம் 40,000 டன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாம்; மார்ச் திங்களில் 50,400 டன் அரிசியும், ஏப்ரலில் 1,14,000 டன் அரிசியும் இறக்குமதியாகுமாம்.

★★★★★★★★★★★★★★★★★

நல்லாட்சி காண
எதிர்க்கட்சி அமைய

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★

'மன்றம்'

டெலிபோன் எண்

சென்னையில், 'மன்றம்' அலுவலகத்தில் டெலிபோன் வசதி செய்து தரப்பட்டுள்ளது.
எண்: **55697.**

கழகத் தேர்தல் நிதிக்கு மருத்துவர் சார்பில் அன்பளிப்பு

சிந்தாதிரிப்பேட்டை தேர்தல் கூட்டத்தில் கழக வீரர்களின் கொள்கை முழக்கம்

சென்னை, பிப். 24—

தென் சென்னைப் பாராளுமன்றத் தொகுதியிலும், எழும்பூர் சட்டசபைத் தொகுதியிலும் போட்டியிடும் தி.மு. கழக அபேட்சகர்கள் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தோழர் அ. பொ. அரசு எம்.சி. தலைமையில் நேற்று மாலை சிந்தாதிரிப்பேட்டையில் மருத்துவர் சார்பில் தேர்தல் பொதுக்கூட்டமும், தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டமும் நடைபெற்றது.

துவக்கத்தில் தோழர்கள் சிலர் இயக்கப் பாடல்கள் பாடினர்.

தோழர் வி. ஜி. கிருஷ்ணன் சிறிது நேரம் உடற்பயிற்சி செய்து காட்டினர்.

தலைவர் உரைக்குப்பின், தோழர் க. அன்பழகன் அவர்கள் சிறிது நேரம் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். அடுத்து தோழர் டி. சண்முகம் அவர்கள் மந்திரிகளின் ஒழுங்கற்ற போக்குகளைச் சுட்டிக்காட்டிப் பேசினர்.

பின்னர், அந்த வட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் செயலாளர் தோழர் ஜான் திராவிட முன்னேற்றக் கழகத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் ஆதரிக்கவேண்டிய அவசியத்தை வற்புறுத்தியும், டாக்டர் அம்பேத்கார் அவர்களின் கொள்கைகளை உண்மையிலே கடைப்பிடித்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தமிழ் நாட்டில் பாடுபடும் ஒரே இயக்கம் தி. மு. கழகம்தான் எனவும், எனவேதான் தாழ்த்தப்பட்ட மக்கள் கழகத்திற்கு ஆதாவு தரவேண்டுமென்றும், அவ்வாறு கழகத்தவருக்கு ஆதரவு தருவதின் மூலமே எதிர்காலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் நல்வாழ்வு வாழ முடியும் என்றும் எடுத்துக் கூறினர்.

அடுத்து தோழர் டி. கே. சீனிவாசன் அவர்கள், கழகத்தை இழித்துப் பழித்துப் பேசும் மாற்ருருக்குப் பதிலளிக்கும் வகையில் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

கூட்டத்தின்போது, தோழர் அன்பழகன் அவர்களிடம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக, மலேயாவிலுள்ள மருத்துவர் சார்பில் ரூ. 48-ம், சென்னை மருத்துவர் சார்பில் ரூ. 106—14—0-ம் ஆகமொத்தம் ரூ. 154-14-0 அளிக்கப்பட்டது. மேலும் தோழர் அன்பழகன் அவர்களுக்கு, தேர்தல் நிதிக்காக, திருப்பதியைச் சேர்ந்த கழகத் தோழர்களால் ரூ. 100 அன்பளிப்பு தரப்பட்டது. தோழர் அன்பழகன் நன்றி தெரிவித்துக்கொண்டார்.

(ந. - கி.)

கழகத்திற்கு ஆதரவு நல்குவோர் தொகையும் வகையும் வளருகிறது

'ஆசிரியர் நிலை உயர தி. மு. கழகமே பாடுபட முடியும்'

'ஆரம்பக் கல்வி' வழங்கும் கருத்துரை

சென்ற பத்து ஆண்டுகளாகத் தமிழ் நாட்டின் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த கட்சி காங்கிரஸ்!

இந்த பத்தாண்டுக் காலத்தில், ஆரம்ப ஆசிரியர்களாகிய நம்முடைய பிரச்சினைகளை, காங்கிரஸ் ஆட்சி, அக்கரையோடு கவனித்து, ஆர்வத்தோடு முன்வந்து, அன்போடு உதவி புரிந்ததா என்ருல், இல்லை!

தேர்தலுக்கான தேதிகள் நெருங்கி வருகிற நேரத்தில் மட்டும்தான் நம்மைப்பற்றிய கவனமே அவர்களுக்கு வருகிறதே தவிர, ஏனைய சமயங்களில், நாம் யார்—நம்முடைய பிரச்சினைகள் என்ன—நம்மை வாட்டிடும் வேதனையின் அளவு எத்தகையது—அந்த வேதனையைப் போக்கிட யாது செய்யவேண்டும் என்பவற்றைப் பற்றியெல்லாம் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் சிந்தித்துப் பார்த்ததுகூடக் கிடையாது.

சென்ற பொதுத் தேர்தல் நெருங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்னுல், ஏதோ இரண்டோர் சலுகைகளைக் காங்கிரஸ் அரசாங்கம் நமக்கு அளித்தது.

அதுபோலவே, இந்தப் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னுல், நம்முடைய மாத ஊதியத்தில் ஐந்து ரூபாயை உயர்த்தியிருக்கிறது, அந்த அரசாங்கம்!

தேர்தல் நெருங்கி வந்த இந்த இரு வேளைகளைத் தவிர, ஏனைய சமயங்களில் இந்தப் பத்து ஆண்டுகளில் நம்மைப் பற்றி இந்தக் காங்கிரஸ் ஆட்சியினர், குறிப்பிடத்தக்க அக்கரை எதையும் காட்டியதாக நமக்குத் தெரியவில்லை.

தேர்தல் நேரத்தில் மட்டுமே நம்மைப் பற்றிச் சிறிதளவு கவனம் செலுத்துகிருர்களே காங்கிரஸ் ஆட்சியாளர்கள்—இந்தப் போக்கை, உண்மையிலேயே நம்மிடத்தில் அக்கரை கொண்டிருப்பவர்களின் போக்கு என்று எப்படி நாம் கருதமுடியும்?

பொதுத் தேர்தலில் நம்முடைய ஓட்டுகளைப் பெறுவதற்காகச் செய்யப்படுகிற தந்திரம் இது என்று பல ஆரம்ப ஆசிரியர்கள் கருதுகிருர்கள். அவர்களுடைய கருத்தைத் தவருனது என்று எப்படி நாம் ஒதுக்கிவிட முடியும்?

ஆரம்ப ஆசிரியர்களாகிய நம்மை மட்டுமல்ல—என். ஜி. ஓ.க்கள், போலீஸ் கான்ஸ்டபிள்கள், அரசாங்க இறுதிநிலை ஊழியர்கள், பிற்பட்ட வகுப்பினர்கள் முதலிய பல திறத்தினரையும்கூட இப்படித்தான் தேர்தலில் மட்டுமே கவனித்துப் பார்க்கிருர்கள். ஏனைய நேரங்களில் அலட்சியப் பார்வையையே எடுத்து வீசுகிருர்கள்.

காங்கிரஸ் ஆட்சியாளர்களின் நோக்கிலும் போக்கிலும், நேர்தல் நேரத்தில் மட்டும் பாசமும் நேசமும் ஏனைய நேரங்களில், 'ஆகட்டும், பார்க்கலாம்,' என்கிற அலட்சியமும், கவலையின்மையும் தவழ்வதற்குரிய ஒரே காரணம், சட்டசபையில் பலமான எதிர்க்கட்சி இல்லாதது தான்!

தேர்தலில் இவர்களுடைய ஓட்டுகளெல்லாம் கிடைக்காவிட்டால் நாம் மீண்டும் ஆட்சிப்பீடத்தில் அமர முடியாதே என்கிற அச்சம் உள்ளத்தைக் குடைகிறது. எனவே, தேர்தல் நேரத்தில், நம்மீதெல்லாம் நேச உணர்ச்சியையும் பாசக் கருத்துக்களையும் பொழிகிருர்கள்.

தேர்தலில் வெற்றி பெற்று, சட்டசபைக்குள் நுழைந்து, அமைச்சர் நாற்காலிகளில் அமர்ந்துவிட்ட பிறகு இந்த அச்சம் பறந்தோடிவிடுகிறது. 'ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகுதானே இன்னேர் பொதுத் தேர்தல்; அதுவரையில் இவர்களைப் பற்றியெல்லாம் ஏன் எண்ணிப் பார்த்து வேதனைப்பட வேண்டும்?'—என்கிற நினைப்பு உள்ளத்தில் நுழைந்துவிடுகிறது.

ஆனுல், சட்டசபையில் பலமான எதிர்க்கட்சி ஒன்று இருந்திருந்தால், இத்தகைய தவருன நினைப்பு ஆட்சியாளர்களின் உள்ளத்தை ஆட்படுத்தியிருக்காது. ஆரம்ப ஆசிரியர்களாகிய நம்முடைய நிலையையும் நம்மைப் போலவே பொருளாதாரத் துறையில் பெருந்துயரத்துக்கு ஆளாகிக்கிடக்கும் ஏனைய சமுதாயப் பிரிவினரின் நிலையையும், எதிர்க்கட்சியினர், அடிக்கடி இடித்துக்காட்டி வாதாடியிருப்பார்கள்.

எந்தக் கண்ணேட்டத்திலிருந்து பார்த்தாலும்சரி, சட்டசபையில் வலிவும் பொலிவும் மிக்கதோர் எதிர்க்கட்சி இருந்தாக வேண்டியது அவசியம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. ஆனுல், அப்படிப்பட்ட பலமான எதிர்க்கட்சி இதுவரை அமையவில்லை சட்டசபையில்.

இந்தத் தேர்தலின் விளைவாக வாவது, அத்தகைய எதிர்க்கட்சியைச் சட்டசபையில் உருவாக்க வேண்டியது, ஆரம்ப ஆசிரியர்களின் தனிப்பெருங்கடமையாகும்.

இன்றைய நிலையில் தமிழ் நாட்டில், அத்தகைய எதிர்க்கட்சியாக அமருவதற்குத் தேவையான அளவு மக்கள் ஆதரவும் தகுதி—திறமையும் வாய்ப்பு—வசதியும் ஆர்வம்—ஆற்றலும், எந்தக் கட்சிக்கு இருக்கின்றன?

கம்யூனிஸ்டுக் கட்சிக்கு அந்த வாய்ப்பு இல்லை; ஏனென்ருல் அந்தக் கட்சி, ஆலைத் தொழிலாளர்களில் ஒரு பகுதியினரிடம் மட்டுமே இதுவரை வளர்ந்துவந்திருக்கிறதே தவிர, பொதுமக்களின் பேராதரவைப் பெறும் முயற்சியில் இன்னமும் இறங்கவே இல்லை.

பிரஜா சோஷலிஸ்டுக் கட்சியும் சோஷலிஸ்டுக் கட்சியும், முதல்தரமான எதிர்க்கட்சியாக விளங்குவதற்குத் தேவையான வளர்ச்சியை இன்றளவும் பெறவில்லை.

தமிழரசுக் கழகமும் திராவிடர் கழகமும் தேர்தல் களத்தில் இறங்கவேயில்லை.

ஆகவே, இன்றையத் தேர்தலில், பலமான எதிர்க் கட்சியாக அமைவதற்குத் தேவையான திறமையையும் மக்கள் ஆதரவையும் ஏனைய பல தகுதிகளையும் ஒருங்கே பெற்றிருக்கிற கட்சி, திராவிட முன்னேற்றக் கழகம் ஒன்றுதான் என்பது தெளிவாக விளங்குகிறது.

இந்நிலையில், திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்களை ஆதரித்துத் தங்கள் வாக்குகளை அளிப்பதே ஆரம்ப ஆசிரியர்களின் கடமையுமாக அமைகிறது.

இதைத் தவிர, ஆரம்ப ஆசிரியர்களின் முன்னுல் வேறு வழி எதுவும் இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

இதைத் தவிர, வேறு எந்த வழியைப் பின்பற்றினுலும், சட்டசபையில் பலமான எதிர்க்கட்சி அமையும் என்கிற நம்பிக்கை இல்லை.

சட்டசபையில் பலமான எதிர்க்கட்சி அமையாவிட்டாலோ, நம்முடைய நிலையைப் பற்றி-அதிலே தவழும் வேதனையை ஒழிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி இனி அடுத்தத் தேர்தலின் போதுதான் அரசாங்கத்தாரின் கவனம் செல்லுமே தவிர, அதற்கு இடையில் நம்மைப் பற்றிச் சிந்திக்கவே மாட்டார்கள்.

ஆரம்ப ஆசிரியர்களே! அருமை நண்பர்களே! எழுத்தறிவிக்கும் இறைவர்களே! இந்தத் தேர்தலின் மூலம், வன்மைமிக்க எதிர்க்கட்சியை அமைத்தாக வேண்டும் என்பதில் கண்ணுங்கருத்துமாக இருங்கள். அதற்கு ஏற்ற வகையிலேயே உங்களுடைய ஓட்டுகளைப் போடுங்கள்.

கவனமிருக்கட்டும்—கவனமிருக்கட்டும். பலமான எதிர்க்கட்சி உருவாகித் தீரவேண்டும்—நாடு வாழ—நலிவு தீர—சனநாயகம் சிறப்படைய!

★★★★★★★★★★★★★★★★★

இழந்த உரிமைகளைப்பெற
இழிநிலைகளைத் துடைக்க

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★

கனரக இயந்திரங்கள் உற்பத்திக்குத் திட்டம்

நான்கு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படும்?

புதுடில்லி, பிப். 25—

நாட்டின் எதிர்காலத்திற்குத் தேவையான கனரக இயந்திர சாதனங்களை உற்பத்திச் செய்ய நான்கு தொழிற்சாலைகளை ஏற்படுத்தலாம் என்று பிரிட்டிஷ் கனரகத் தொழில் எஞ்சினீயரிங் குழு ஒன்று இந்தியப் பேரரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறது. ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் ரூ. 5 கோடி செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

இரு அறிக்கைகளையும் பரிசீலனை செய்ய நிபுணர் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்திருக்கிறது.

★★★★★★★★★★★★★★★★★

தாயகம் 'தமிழ்நாடு' ஆக
தாய்மொழி அரசோச்ச

தி. மு. க.

அபேட்சகர்களுக்கே
ஓட்டு அளியுங்கள்

★★★★★★★★★★★★★★★★★

மார்ச் முதல் நாள் தேர்தல்: களம் புகும் கழக வீரர்கள்!

கே.ஏ.மதியழகன், கே.கே.நீலமேகம், கண்ணதாசன், ஏ. கோவிந்தசாமி, ப. உ. சண்முகம், இராசேந்திரன் ஆகியோர் தொகுதிகளில் வாக்குப் பதிவு

தமிழகத்தில் ஐந்து நாட்களில் நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தல்கள் மார்ச் முதல் தேதியன்று துவங்குகின்றன. அன்று, பல்வேறு தொகுதிகளிலும் போட்டியிடும் நமது கழக அபேட்சகர்களின் தேர்தல் சின்னம், நமது தோழர்களை எதிர்த்துப் போட்டியிடுவோர் பற்றிய விபரங்கள் கீழே தரப் படுகின்றன. தடித்த எழுத்துக்களில் உள்ளவை பாராளுமன்றத் தொகுதிகள்.

தொகுதிகள்	கழக அபேட்சகர்	சின்னம்	எதிர்த்துப் போட்டியிடுவோர்
திருவண்ணாமலை	தருமலிங்கம்	உதயசூரியன்	ஜி. நீலகண்டன் (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்
1. போளூர்	களம்பூர் அண்ணாமலை	உதயசூரியன்	வி. கிருஷ்ணகாந்தன் (காங்); டி. பி. கேசவரெட்டியார் (க. சி.க.); மற்றும் 2சுயேச்சைகள்
2. துரிஞ்சாபுரம்	முருகையன்	உதயசூரியன்	எம். ஏ. மாணிக்கவேலு (காங்)
3. திருவண்ணாமலை (பொது)	ப. உ. சண்முகம்	உதயசூரியன்	வி. கே. அண்ணாமலை கண்டர் (காங்): பெருமாள் நயினர் (சுயே).
,, (தனி)	சந்தானம்	சேவல்	ஏ. ஆறுமுகம் (காங்); மற்றும் 3 சுயேச்சைகள்
திருச்செங்கோடு	ப. இராமலிங்கம்	உதயசூரியன்	டாக்டர் பி. சுப்பராயன் (காங்); பழனியப்ப பத்தர்(பி.எஸ்.பி.); ஒரு சுயேச்சை
1. தாரமங்கலம்	கே. எஸ். சின்னப்பன்	சேவல்	என். எஸ். சுந்தரராசன் (காங்); மற்றும் இரு சுயேச்சைகள்
2. மேட்டூர்	க. கு. சின்னசாமி	உதயசூரியன்	அர்த்தநாரீஸ்வர கௌண்டர் (காங்); சுரேந்திரன்(பி.சோ.); ஒரு சுயேச்சை
3. சங்கரி	இரா. தாண்டவன்	சேவல்	கே.எஸ். சுப்பிரமணிய கௌண்டர் (காங்): டி. எஸ். அர்த்தநாரி (கம்); ஒரு சுயேச்சை
4. திருச்செங்கோடு (பொது)	எஸ். பி. ரங்கசாமி	சேவல்	காளியண்ணன்(காங்); மாரியப்ப முதலி (பி. சோ.) மற்றும் சில சுயேச்சைகள்.
,, (தனி)	முத்துசாமி	யானை	ஆர். கந்தசாமி (காங்):கொமரன் (பி. சோ.); மற்றும் சிலசுயேச்சைகள்
திண்டிவனம்	....	......	....
1. வளவனூர்	ஏ. கோவிந்தசாமி	உதயசூரியன்	கிருஷ்ண கவுண்டர் (காங்); ஒரு சுயேச்சை
கும்பகோணம்	....	......	....
1. ஆடுதுறை	பி. தர்மலிங்கம்	உதயசூரியன்	ராமாமிர்ததொண்டமான்(காங்): மற்றும் 3 சுயேச்சைகள்
2. கும்பகோணம்	கே. கே. நீலமேகம்	உதயசூரியன்	சம்பத் (காங்); இராமசாமி(கம்); மற்றும் 4 சுயேச்சைகள்
3. பாபநாசம்(தனி)	அரி அரநாதன்	உதயசூரியன்	சுப்பிரமணியம் (காங்); மற்றும் இரண்டு சுயேச்சைகள்
4. திருவையாறு	பட்சிராசன்	உதயசூரியன்	ஆர். சுவாமிநாத மேற்கொண்டார் (காங்); எஸ். சுயம்பிரகாசம் (கா. சி. க.) எஸ். இராமலிங்கம் (கம்)
புதுக்கோட்டை	....	......	....
1. ஆலங்குடி (பொது)	வி. சுப்பையா	உதயசூரியன்	அருணாசல தேவர் (காங்); மற்றும் 5 சுயேச்சைகள்
,, (தனி)	ஏ. ஆறுமுகம்	நட்சத்திரம்	சின்னையா (காங்); கருப்பையா (பி.சோ.); தங்கவேலு (கம்)
2. திருக்கோட்டியூர்	கண்ணதாசன்	உதயசூரியன்	என். வி. சொக்கலிங்கம் (காங்); எஸ். சண்முகம் (கம்); மற்றும் 2 சுயேச்சைகள்
3. காரைக்குடி	இராம சுப்பையா	உதயசூரியன்	எம். ஏ. முத்தைய செட்டியார் (காங்); சா. கணேசன் (கா. சி. க.) மற்றுமொரு சுயேச்சை
தென்காசி	....	......	....
1. அம்பாசமுத்திரம்	எஸ். கந்தசாமி	உதயசூரியன்	கோமதி சங்கரதீட்சிதர் (காங்): நல்லசிவன் (கம்); ஒரு சுயேச்சை
2. சங்கரன்கோவில் (பொது)	வெள்ளைத்துரை	சேவல்	சுப்பையா (காங்); மற்றும் சில சுயேச்சைகள்
,, (தனி)	சி. சண்முகம்	உதயசூரியன்	ஊர்க்காவலன் (காங்); உத்தமன் (பி. சோ); மற்றும் ஒரு சுயேச்சை
பெரியகுளம்	....	......	....
1. கோடைக்கானல்	வி. வி. ராசாமி	உதயசூரியன்	எம். அழகிரிசாமி (காங்); மற்றொரு சுயேச்சை
2. தேனி (பொது)	எஸ். எஸ். இராசேந்திரன்	சேவல்	என். ஆர். தியாகராசன் (காங்); எஸ். அருணாசலம் (கா. சி. க.)
பொள்ளாச்சி	....	......	....
1. உடுமலைப் பேட்டை	கே. ஏ. மதியழகன்	உதயசூரியன்	மௌனகுருசாமி நாயுடு (காங்); டி. கந்தசாமி கவுண்டர் (பி. சோ.); மற்றொரு சுயேச்சை
2. பொள்ளாச்சி (பொது)	அ. ச. பாலசுப்பிரமணியம்	உதயசூரியன்	என். மகாலிங்கம் (காங்); தங்கவேலு கவுண்டர் (பி. சோ.)
,, (தனி)	இ. இராமசாமி	சேவல்	கே. பொன்னையன் (காங்); வி. கே. ரங்கசாமி (கம்); மற்றும் இரண்டு சுயேச்சைகள்

காஞ்சி தொகுதியில் அண்ணா

சுற்றுப்பயண விவரம்

பிப். 27:
மாலை 3 மணி: அய்யங்கார் குளம் கிராமம்
,, 5 மணி: செவிலிமேடு கிராமம்
இரவு 7 மணி: காஞ்சிபுரம் பிள்ளையாளையம் திரு வேகம்பன் தெரு
,, 10 மணி: காஞ்சிபுரம் ஜீயர் நாராயணபாளையம் தெரு

பிப். 28:
மாலை 3 மணி: வளத்தூர் கிராமம்
,, 5 மணி: புரிசை கிராமம்
,, 6 மணி: காஞ்சிபுரம் ஒலிமுகமது பேட்டை
இரவு 10 மணி: அடிசன் பேட்டை, செட்டித் தெரு

மார்ச் 1:
மாலை 4 மணி: புள்ளலூர் கிராமம்
,, 5 மணி: கோவிந்தவாடி கிராமம்
இரவு 7 மணி: காஞ்சிபுரம் ரங்கசாமிகுளம்

மார்ச் 2:
மாலை 6 மணி: காஞ்சிபுரம் கெங்கைகொண்டான் மண்டபம்

[மார்ச் 2-ந் தேதி அண்ணா நிகழ்ச்சியில் டாக்டர் சர். ஏ. இராமசாமி அவர்களும் கலந்துகொள்வார்.]

ஆயிரம்விளக்கு தொகுதி தோழர்கட்கு:

"28-2-57 இரவு 9-30 மணிக்கு சென்னை-மவுண்ட்ரோடு 'ஓட்டல் இந்தியா'விற்கு எதிரிலுள்ள பன்னீர் செல்வம் படிப்பகத்தில், சென்னை—ஆயிரம் விளக்குத் தொகுதி தி. மு. கழக ஊழியர் கூட்டம் நடைபெறும். மேற்படி தொகுதியைச் சேர்ந்த கிளைக் கழகச் செயலாளர்கள், சார்பு மன்றங்கள், படிப்பகங்கள் ஆகியவற்றின் செயலாளர்கள் தங்களிடம் கொடுக்கப்பட்டுள்ள வாக்காளர் பட்டியல்களுடனும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 'போலிங் எஜெண்டு'களுடனும் தவருது வரும்படி வேண்டுகிறேன்"

என்று, சென்னை-ஆயிரம்விளக்கு தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி கேட்டுக்கொள்கிருர்.

சென்னை 10-வது வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர்கட்கு:

27-2-57 மாலை 6 மணிக்கு சென்னை—சண்முகராயன் தெரு வேணுகோபால் பள்ளியில், 10-வட்ட தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் தோழர் கோ. செங்குட்டுவன் முன்னிலையில் நடைபெறும். வட்டத்திலுள்ள கழகச் சார்புடைய மன்றங்கள், படிப்பகத் தோழர்களும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அன்றிரவு 8 மணிக்கு தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில் தோழர் ஏ. எஸ். வேணு 'ஊழியர்கள் கூட்டம் என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவர்.

எம். எல். ஏ. பதவிக்கு......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கெட்ட பெயர் நமது இயக்கத் தோழர்கள் அந்தப் பதவிக்குப் போனல் நீங்கும்; அந்தப் பதவிக்கு ஒரு புதிய மரியாதை கிடைக்குமே தவிர, நமக்கு அதனலே கிடைக்கவேண்டிய புதிய மரியாதை எதுவும் கிடையாது."

—காஞ்சிக் கூட்டம் ஒன்றில் ஈ. வெ. கி. சம்பத்

தேர்தல் கூட்டங்கள்

27—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை-சோடம்பாக்கம் நெடுஞ்சாலை, ஜெமினி ஸ்டுடியோவுக்குப் பின்புறமுள்ள திடலில், நுங்கம்பாக்கம் வள்ளுவர் படிப்பகத்தின் சார்பில் தேர்தல் கூட்டம் தோழர் ஜி. ஏழுமலை தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, பி. ஆர். கோகுலகிருட்டிணன், ஏ. எஸ். ஜேசுபாதம், வ. சங்கரநாராயணன், கிள்ளிவளவன் ஆகியோர் பேசுவர்.

கோமளீசுவரன்பேட்டை:

28-2-57 இரவு 7-30 மணிக்கு, சென்னை - கோமளீசுவரன் பேட்டை லெப்பைத் தெருவில் தி. மு. கழக அபேட்சகர்கள் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன் ஆகியோரை ஆதரித்துத் தேர்தல் கூட்டம் நடைபெறும். தோழர்கள் கே. அப்துல் காதர், இரசூல், வேணுகோபால்ராவ் ஆகியோர் பேசுவர்.

சென்னை 31-வது வட்டம்

28—2—57 மாலை 6 மணிக்கு, சென்னை 31-வது வட்ட நாராயண நாய்க்கன் தெருவில் தி. மு. கழகத் தேர்தல் கூட்டம் தோழர் எம். எஸ். அப்துல் காதர் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, இரசூல், எம். நாகூர், ஏ. எப். மாறன் ஆகியோர் பேசுவர். தோழர் வெங்கடராமன் இன்னிசை வழங்குவார்.

சென்னை—மயிலை:

27—2—57 இரவு 8 மணிக்கு, சென்னை—மயிலை சித்திரக்குளத்தருகில், மயிலை சிந்தனையாளர் கழக ஆதரவில் தென் சென்னை பாராளுமன்றத் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் பி. பாலசுப்பிரமணியம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பொதுக்கூட்டம் தோழர் ஏ. வி. இராமன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், பி. ஆர். கோகுலகிருஷ்ணன், முகவை-ஆர். எஸ். பாண்டியன், கரிகாலன், ரே. மு. காதர் ஆகியோர் பேசுவர்.

சிந்தாதிரிப்பேட்டை:

28—2—57 இரவு 8 மணியளவில் சென்னை - சிந்தாதிரிப்பேட்டை முக்கியம்மன் கோயில் தெருவில் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் பி. பாலசுப்பிரமணியம், க. அன்பழகன், ஏ. கே. வில்வம், தோழியர் அருதா ஆகியோர் பேசுவர்.

சென்னை-கே.வி.கே. சாமி மன்றத் துவக்க விழா

28-2-57 மாலை 6 மணியளவில் சென்னை பெரியமெட் நடேசநகரில் கே. வி. கே. சாமி மன்றத் துவக்க விழா நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஏ. கே. வில்வம், ஜார்ஜ், தோழியர் சத்தியவாணி-முத்து ஆகியோர் பேசுவர்.

திருமணம்

27-2-57 காலை 8 மணிக்கு சென்னை — இராயப்பேட்டை தோமையப்பன் வீதி 11 எண்ணுள்ள மனையில் தோழர் அ. இராசகோபால்—தோழியர் மு. செயலட்சுமி ஆகியோர் வாழ்க்கை ஒப்பந்தம் தோழர் கோ. இளவரசு தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சுரதா, இரா. அகமழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரிய நாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.